முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1359

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.06.2023, திங்கட்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
ஞானிகளை படைக்க வந்த தேசிகா வாழ்க
தானதர்ம உயர் வழிகளே
தரணியை வளமாக்குமென அவதாரம் புரிந்த
2. புரிந்தநல் ஆறுமுக அரங்கனே
புகலுவேன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அறிவுரை ஞான அறிவுரை ஆசியாகவே
நாட்டிடுவேன் சோபகிருது மிதுனத் திங்களில்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 04 ம் நாள், 19.06.2023, திங்கட்கிழமை)

3. திங்களிலே அரங்கனுக்கு பலம் கூட்ட
தெரிவிப்பேன் சுப்ரமணியர் யானும்
ஓங்காரம் அரங்கனுள் சக்தியாக
உயர்வாக ஒலித்துக்கொண்டு உலகை நோக்கி
4. நோக்கியே மகா சக்தியாக வெளிப்பட்டுவர
உயர்வான அரங்கன் ஓங்காரக்குடிலை நாடி
தயவாக உலகோர் தர்மத்தில் உதவி
தக்கபடி தவபலம் கொண்ட தீட்சையை ஏற்று
5. ஏற்று எங்கும் ஞானியர்கள் பேரில் ஆன உயர் பூஜையை
இயல்பாக அவரவர் இல்லில் செய்ய
செய்யவே அந்த சக்தி ஆற்றலாகி
செப்பிடுவேன் உலகமெல்லாம் பரவி நிற்கும்
6. தயவாக எந்த தேசத்தில் அரங்கன் நாமம்
ஜெபதபமாக முழங்கப் படுகின்றதோ
அங்கெல்லாம் சடுதி உயிர்கொலை நீக்கி
ஜீவகாருண்ய சக்தி பரவி

7. அந்த தேசம் இயற்கை பேரிடர் துன்பத்தில் இருந்து விலகி
ஆறுமுகன் என் ஆசிக்குரிய தேசமாகி
அனைத்து தேசங்களும் ஓங்காரத்தின் உயர்வான சக்திவழி பாதுகாப்பாகி
உத்தமமாய் ஞான ஆளுமைக்கு தகுதி பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–